# எட்டுத்தொகையில் மகளிர் பொருளாதாரம்

*முனைவர் த.ஓ. பிளசிங் இதழ்*
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
புனித அன்னை தெரசா பொறியியல் கல்லூரி, வாகைக்குளம், தூத்துக்குடி
https://doi.org/10.5281/zenodo.15323771

***ஆய்வுச்சுருக்கம்***

*சங்க இலக்கியங்கள் மக்களின் வாழ்க்கை சிறப்பினை எடுத்துக் கூறுவதாக உள்ளது. அவ்வகையில் மகளிர் தொழில்கள் மற்றும் அவர்களது பொருளாதாரம் பற்றி ஆய்வு செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.*

**முன்னுரை**

*மனிதன் தோன்றிய காலம் தொட்டே அவனது அடிப்படைத் தேவைகளும் தொடங்கியது. இவ்வடிப்படைத் தேவைகளில் ஒன்றாக உணவு உள்ளது. இந்த உணவிற்காக மனிதன் ஓரரிடம் விட்டு இன்னோர் இடத்திற்குச் சென்று உணவைத் தேடினர். பின்னர், இயற்கை காலநிலைகளான குளிர், வெயில் மற்றும் விலங்குகள் போன்றவற்றிலிருந்து தன்னை காத்துக்கொள்வதற்காக உடையும், உறையுளையும் மனிதன் ஏற்படுத்திக் கொள்வதற்காக தொழில் உருவானது. இத்தொழில்கள் சங்க காலம் முதல் இன்று வரை நம் பொருளாதாரம் வளர்ச்சிக்கு அடிப்படையாக உள்ளன. சங்க காலத்தில் இருந்த விவசாயம் என்ற நிலைமாறி இன்று மென்பொருள் வளர்ச்சியே பொருளாதார வளர்ச்சிக்கு காரணமாக உள்ளது.*

**மகளிர் தொழில்கள்**

*பொருளாதாரவளர்ச்சிக்குசங்ககாலத்தில் மக்கள் அவர்களின் தொழிலையே நம்பியிருந்தனர். ஒவ்வொருவருக்கும் தங்களது தொழில் துணையாக இருந்தது. குறிஞ்சி நிலத்தில் குறவர்கள், முல்லை நிலத்தில் இடையர், மருத நிலத்தில் உழவர், நெய்தல் நிலத்தில் பரதவர் என்ற அமைப்பில் கிடைத்த பொருளாதாரத்தைக் கொண்டு வாழ்க்கையை அமைத்தனர்.*

**ஆடு மேய்த்தல்**

*முல்லை நில மக்கள் ஆய்ச்சியர், ஆயர்கள் என்ற பொது சொல்லால் அழைக்கப்ப பெற்றனர். இந்நிலமக்களின் முக்கியத்தொழில், மாடுமேய்த்தல், மோர், தயிர், வெண்ணெய் போன்றவற்றை விற்றல் போன்ற தொழிலைச் செய்தனர். முல்லை நில ஆயர் மகளிர் இல்லங்களில் உள்ள மாடுகளை மேய்த்தனர்.*

***“ஆங்கு***
***தம்புலஏறு பரத்தர உயர்ந்த தம்***
***அன்பு உறு காதலர் கைபிணைந்து ஆய்ச்சியர்”***
***(முல்லை கலி 6:31-33)***

*என்ற முல்லைக்கலிப் பாடல்கள் வழியாக ஆய்ச்சியர் மாடுகளை மேய்ச்சலில் ஈடுபடுத்தியதை அறியமுடிகிறது. மேலும், பசுக்களிடமிருந்து நாள்தோறும் கிடைக்கும் பால் மற்றும் தயிர் கடைந்து மோராக்கி அதனைப் பிற இடங்களுக்கு எடுத்துச் சென்று விற்பதனை,*

***பல் ஊழ் தயிர் கடையத் தாஇய புள்ளிமேல்***
***கொல் ஏறு கொண்டான் குருதி மயங்குறப்***
***புல்லம் எம் தோளிற்கு அணியோ? எம் கேளே***
***ஆங்கு, போர் ஏற்று அருந்தலை அஞ்கலும் - இவ்***
***- இரண்டும்***
***ஓராங்குச் சேறல் இலவோ? எம் கேளே!***
***(முல்லை கலி 6:37-41)***

*என்ற கலித்தொகை பாடலடிகள் உணர்த்துகின்றன.*

*ஆய்மகள் ஒருத்தி தான் தயிர் கொண்டு வந்த மிடா நிறையும் படி மருத நிலத்து மகளிர் தந்த வெண்ணெல்லைப் பெற்று சென்றதனை புறநானூறு,*

*"---- ஆய் மகள்*
***தயிர்கொடு வந்த தசும்பு நிறைய***
***ஏரின் வாழ்நர் பேர் லரிவையர்***
***குளக்கீழ் விளைந்த கள்கொள் வெண்ணல்***
***முகந்தனர் கொடுப்ப உவந்தனர் பெயரும்"***

*என்ற பாடலின் வாயிலாக தயிருக்கு பண்டமாற்றாக வெண்ணெல்லை பெற்ற செய்தியினை அறியமுடிகிறது.*

**தினைப்புனம் காத்தல்**

*குறிஞ்சி நிலத்தை சார்ந்த பெண்கள் கொடிச்சியர் எனப்பட்டனர். காவலின் பொருட்டுத் தினைப்புனத்தில் அமைக்கப்பட்ட பரண் மீதிருந்து தினையை உண்ணவரும் பறவைகளைக் கவண்வீசியும் தட்டை தட்டியும் ஓட்டிக் காத்தனர். என்பதனை,*

***"தழலை வாங்கியும் தட்டையும் ஓம்பியம்***
***--------------------------------***
***குறமகள் காக்கும் ஏனல்"***

***(அகம் 118, 11-13)***

***"படுகிளி கடியும் கொடிச்சி கைக்குளிரே***
***உண்கிளி கடியம் கொடிச்சி கைக்குளிரே"***

***(குறு 291:1-2)***

**வேளாண்மைத் தொழில்**

*மருதநிலத்து மகளிர் உழத்தியர் எனப்பட்டனர். வேளாண்ண் தொழில் செய்தவர்கள் உழவன், உழத்தியர் என அழைக்கப்பட்டனர். உழவர்கள் மாடுகள் புட்டிய ஏர்களைக் கொண்டு நிலத்தை உழுவர். மகளிர் உழுத வயலில் நெல்நாற்றுகளை நடுவர், களைகளை பறிப்பர், அறுவடை செய்து நெற்கட்டுகளை சுமந்து வந்து களத்தில் சேர்ப்பர். நெல்லடித்த பின் முறத்தைக் கொண்டு காற்றிலே, நெல்லைத் தூற்றி எடுப்பர். கொண்டை முடித்துத் தழையடை அணிந்திரந்த கடைச்சியர் வயலில் களைகளாக முளைத்த நெய்தல், ஆம்பல் போன்றவற்றைக் களைந்த செய்தியை,*

***"கொண்டைக் கூழைத் தண்டழைக் கடைசிர்***
***சிறுமான் நெய்தல் ஆம்பலொடு கட்கும்***
***மலங்குமிளர் செறு"*** ***(புறம் 61:1-3)***

**புவிற்றல்**

*மருத நிலத்தை சார்ந்த உழவரின் மகள் புவிற்றல் தொழில் செய்தினை, நற்றிணை*

***"துய்த்தலை இதழ பைங்குருக் கத்தியொடு***
***பித்தகை விரபு மலர் கொள்ளீரோ? என***
***வண்டுசூழ் வட்டியன் திரதரும்***
***தண்டலை உழவர் தனிமட மகளே"***

***(நற் 97 : 6-10)***

*என்ற பாடல் வழியாக உழவர் மகன் புவிற்பனைச் செய்ததனை அறியமுடிகிறது.*

**மீன் பிடித்தல்**

*பாண் மகளிர் இசைக்கலையில் வல்லவளாகவும் பாடல்பாடுவதில் சிறந்தவர்களாகவும் இருந்தனர். இவற்றோடு பாண்மகள் மீன் பிடித்தல் தொழிலையும் மேற்கொண்டிருந்தாள் என்பதனை,*

***"நோம் கொள் நுண்கோலின் மீன்கொள் பாண்மகள்"***

***(அகம் 216:1)***

*இப்பாடலடிகளின் வாயிலாக நெய்தல் நிலம் சார்ந்த மக்கள் அல்லாத பாண் மகளிரும் மீன் பிடித்தல் தொழில் செய்ததினை அறிந்து கொள்ள முடிகிறது.*

**நெசவுத் தொழில்**

*சங்க காலத்தில் நெசவுத்தொழிலில் ஆண்களும், பெண்களும் பட்டிடுந்தனர். அதிலும் பெண்கள் நூல் நூற்கும் பணியில் அதிகம் ஈடுபட்டனர். கணவனை இழந்த பெண்கள் நூல் நூற்பர். புறநானூற்றில் இவர்கள் பருத்திப் பெண்டிர் என அழைக்கப்படுகின்றனர்.*

*இச்செய்தியினை,*

***"உயிர்நடுங்குற்றுப் புலாவிட் டரற்ற***
***சிறையும் செற்றையும் புடையுநற் எழுந்த***
***பருத்திப் பெண்டின் சிறுநீ விளக்கத்துக்***
***கவிப்பு நெற்றிச் சேவலின் தணியும்***
***அருமிளை இருக்கை யதுவே"*** ***(புறம் 326)***

*என் வரும் புறநானூற்று பாடலடிகள் பாடலடிகள் உணர்த்துகின்றன.*

## துணிகளைத் தூய்மைப்படுதலும் தொழில்

பிறமக்களின் தொழில்களிலிருந்து மாறுபட்டதாக பிறரின் ஆடைகளைத் தூய்மைச் செய்யும் தொழில் உள்ளது. இவ்வாறாக பிறரின் ஆடைகளைத் தூய்மை செய்பவர்கள் "புலத்தி" என்று அழைக்கப்பட்டனர். இதனை,

**"களர்ப்படு கூவற் நோண்டி நாளும்**
**புலைத்தி கழிஇய துவெள் ளறுவை**
**தாதெரு மறுகின மாசுண விருந்து"**

என்ற புறநானூறு பாடலடிகள் வழி அறிந்துகொள்ள முடிகிறது.

மேலும், நூய்மை செய்த ஆடைகளைப் பசையில் தோய்த்து எடுத்தலைக் குறுந்தொகை,

**"நலத்தகைப் புலைத்தி பசைதோய்த் தெடுத்துத்**
**தலைப்புடைப் போக்கிற தண்கயத் திட்ட**
**நீரில் பிரியா பரூஉத்திரி கடுக்கும்**
**பேரிலைப் பகன்றைப் பொதியவீழ் வான்பு"**

**(குறு 330:1-4)**

என்ற பாடல் மூலம் ஆடைகளை பசையில் தோய்த்து மகளிர் பயன்படுத்தியதனை அறிய முடிகிறது. மேலும், துணிகளைத் தூய்மைப்படுத்தும். மகளிர் தமக்குத் துணையாக தம் புதல்வர்களையும் ஈடுபடுத்தினர். இதனை. அகநானூறு

**"உவருணப் பறைந்த ஊன்தலைச் சிறாஅரொடு**
**அவ்வரி கொன்ற கறைசேர் வள்ளுகிர்ப்**
**பசைவிற் புலைத்தி நெடிது பிசைந்து ஊட்டிய**
**புறதுகில் இமைக்கும் பொலன்காழ் அல்குல்"**

**(அகம் 387:4-7)**

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன.

## பெட்டிகள் செய்தல்

ஆடைகள் வெளுக்கும் தொழிலை மேற்கொண்ட மகளிர் துணைத்தொழிலாக பெட்டிகளைச் செய்தது விற்கும் தொழிலையும் செய்தனர். இதனை முல்லைக்கலி,

**மாதர் புதைத்தி விலையாக செய்த்து ஓர்**
**போழின் புனைத்த வரிப்புட்டில் - பட்டிலுள்ளன் உன்**

**(முல்லை.கலி 17:79)**

என்ற கலித்தொகை பாடலின் வாயிலாக பனையோலைக் கொண்டு பெட்டிகள் செய்து விற்றதனை அறிய முடிகிறது.

## கள் விற்றல்

கள்ளினைக் காய்ச்சி விற்கும் தொழிலையும் எட்டுத்தொகை மகளிர் மேற்கொண்டனர். இந்தகைய மகளிர் "கள்ளடு மகளிர்" என்று பெரும்பாணாற்றுபடை (339) குறிப்பிடுகிறது.

**"கள்ளினை மகளிர் பல இடங்களுக்கு சென்று விற்றனர்.**
**அரியல் பெண்டிர் அல்குல் கொண்ட**
**படுவாய்ப் பானைக் ஆர் மாந்திரச்**
**வரிநிறக் கலுழி ஆர மாந்திச்**
**செருவெட்டுச் சிலைக்கு செங்கண ஆடவர்"**

**(அகம் 157:1-4)**

என்ற அகநானூறு பாடலடிகள் வாயிலாக மகளிர் "கள்" எடுத்துச் சென்று விற்றதனையும், இவ்வாறு "கள்" எடுத்து சென்று விற்கும் மகளிர் "அரியல் பெண்டிர்" என அழைக்கப் பெற்றதனையும் அறிந்துக்கொள்ள முடிகிறது.

## தொகுப்புரை

சங்க காலத்தில் ஒவ்வொரு நிலப் பகுதியிலும் வாழ்ந்த ஆடவரும், மகளிடும் தத்தம் தொழில் செய்தனர். ஆடவர்க்குத் துணையாக தொழில் செய்ததையும் அறிய முடிகின்றது. சங்க காலத்தில் மக்கள் முல்லை, குறிஞ்சி மருதம் நெய்தல் நிலப் பகுதியில் வாழந்து தங்களது நிலத்திலிருந்து கிடைத்த பொருள்களை வைத்து தங்களது பொருளாதாரத்தை மேன்படுத்திக் கொண்டனர் என்பதை சங்கப் பாடல் வழியாக அறிந்துக் கொள்ள முடிகிறது.

## பார்வை நூல்கள்


1. குறுந்தொகை - ஆதிநாராயணன் கி.டாக்டர்
2. அகநானுறு - சுப்பிரமணியன்.பெ.முனைவர்
3. கலித்தொகை (மூலமும் உரையும்) - மாணிக்கனார் அ.புலவர்
4. புறநானூறு (மூலமும் உரையும்) - மாணிக்கனார் அ.புலவர்
5. நற்றிணை - பாலசுப்பிரமணியன் கு.வெ